DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No. **8/22** |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW – 6 Ajira** |
| Father's Name | |
| Village | அணையேறி |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 20 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 31.01.2024

**முதல் விசாரணை**

நான் அணையேறி கிராமத்தில் வசிக்கிறேன். விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்லூரியில் படித்துவருகிறேன். அ.சா.2 பாருக் என்பவர் எனது அண்ணன் ஆவார். கவுன்சிலர் ரவி என்பவர் கான்டக்டர் வேலை செய்துவந்தார் அவரிடம் என் அண்ணா மேற்பார்வையாளராக தற்காலிகமாக செய்துவந்தார். கடந்த 11.09.2021ம் தேதி மதியம் 1 மணிக்கு எங்கள் ஊர் மாதாகோவில் அருகில் வாய்க்கால் வடிகால் அமைக்கும் பணி நடந்துகொண்டிருந்ததை என் அண்ணன் மேற்பார்வையாளராக பணிசெய்து வந்தார். அப்போது அங்கு வந்த அய்யப்பன் என்பவர் என் அண்ணனிடம் சிமெண்ட் கேட்டார் அப்போது நான் டைப்ரைட்டிங் கிளாஸ் செல்வதற்காக வாய்க்கால் அமைக்கும் பணியில் இருந்தவர்களிடம் பேசிக்கொண்டு இருந்தேன். என் அண்ணனிடம் சிமெண்ட் கேட்டவர் ஆஜர் எதிரி அய்யப்பன் ஆவார். எதிரி என் அண்ணனிடம் சிமெண்ட் கேட்டபோது அது என்வேலை இல்லை என்றும் கவுன்சிலர் ரவியிடம் கேட்டுகொள்ளுபமாறு சொன்னார் அதனால் எதிரி அங்கிருந்த கவுபார் என்ற இரும்பு ராடால் அடித்தபோது என் அண்ணன் தடுத்தார் அதனால் அந்த இரும்பு கவுபார் கீழே விழுந்துவிட்டது பின்னர் எதிரி அங்கிருந்த சென்டிரிங் அடிக்கும் கட்டையை எடுத்து என் அண்ணன் தலையிலும், இடது கைவிரலிலும் அடித்துவிட்டார். அதனால் என் அண்ணனுக்கு தலையிலும், இடது கைகளிலும் காயம் எற்பட்டது. இந்த சம்பவத்தை நானும், அங்கிருந்த ஏழுமலை, பிரேமா ஆகியோர் பார்த்து நாங்கள் தடுப்பதற்கு முன்பு எதிரி எங்கள் அண்ணனை அடித்துவிட்டார். என் அண்ணனை நாங்கள் அனந்தபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அனுப்பிவைத்தோம், பின்னர் அங்கிருந்து செஞ்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். போலிசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள். நான் நடந்ததை சொன்னேன்.

குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்து 1 மணிநேரம் கழித்து மதியம் 2 மணிக்கு போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து என்னை விசாரித்தனர். என்னை விசாரித்த போது ஏழுமலை, பிரேமா ஆகியோரையும் போலிசார் விசாரித்தார்கள். போலிசார் சம்பவ இடத்தை பார்க்கவில்லை. எதிரி அடித்ததாக சொல்லும் கவுபாரையும் போலிசார் கைப்பற்றவில்லை. என்னுடைய பெயர், விலாசத்தை போலிசார் கேட்டுக்கொண்டு சென்றனர். மீண்டும் 13.09.2021ல் போலிசார் என் வீட்டிற்கு வந்து என்னை விசாரித்தனர். அப்போது போலிசார் சம்பவ இடத்தற்கு சென்று கவுபார், மற்றும் கட்டை ஆகியவற்றை கைப்பற்றினார்கள். என் அண்ணன் செஞ்சி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இரண்டு நாட்கள் இருந்தார். பின்னர் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் அங்கு உள்நோயாளியாக சிகிக்சை பெறவில்லை. பின்னர் ஸ்கேன் எடுப்பதற்காக பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு என் அண்ணன் சென்றார். அங்கு என் அண்ணன் 1 வாரம் சிகிச்சை பெற்றார். என் அண்ணனுடன் நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும், சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரத்தில் நான் அணையேறி கிராமத்திலேயே இல்லை என்றாலும், என் அண்ணனுக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என் அண்ணன் எதிரியை அடித்துகாயப்படுத்திவிட்டார் என்றாலும் அதிலிருந்து தப்பிப்பதற்காக எதிரிமீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. போலிசார் என் வயதை 23 என்று தவறாக எழுதியுள்ளனர் என்றால் சரிதான். நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.